# சிகிச்சை தர மறுத்த

# சாதிவெறி டாக்டர்

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் தாலுக்கா, பங்களாபுதூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்டது வாணிபுதூர் பேரூராட்சி. இப்பேரூராட்சிக்கு உட்பட்ட





தமிழ்த்திலகன்

துக்கநாயக்கன் பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இங்குப் பணிபுரியும் டாக்டர் சிறுவனுக்கு முதலுதவி செய்ய மறுத்ததும், தட்டிக் கேட்ட தந்தைக்கு 1 மாதம் ஜெயில் தண்டனை அளிக்கப்பட்ட செய்தி கேட்டு சம்பவ இடத்திற்குச் சென்றோம்.

வாணிபுதூர் பேரூராட்சியில் உள்ள தமிழ்நகரில் சுமார் 450 தலித் குடும்பங்கள் உள்ளன. இப்பகுதியைச் சேர்ந்த ஞானசேகர் கூறும்போது: என் மகன் தமிழ்திலகன் 9 வயதாகிறது. தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே விழுந்து இடதுகண் புருவத்தில் அடிப்பட்டு இரத்தம் கொட்டியது. உடனே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூட்டிச் சென்றோம். அங்கு டாக்டர், நர்ஸ் யாரும் இல்லை பூட்டியிருந்தது.

சுகாதார நிலையத்தில் பணிபுரியும் டாக்டர் தேன்மொழி வீட்டிற்குச் சென்றோம். வீட்டிற்கு வந்து தொந்தரவு செய்யக்கூடாது. அங்கேயே நர்ஸ் யாராவது இருப்பாங்க போய் பாருங்க என்றனர். என் மகனுக்கு ரத்தம் வழிந்துக் கொண்டிருக்கிறது, தயவு செய்து ஏதாவது மருந்து போடுங்கள் என்று கெஞ்சினேன். டாக்டரின் கணவரோ என்னடா தொந்தரவா போச்சி எந்த ஊர் என்று கேட்டார். நான் தமிழ்நகர் என்று சொன்னவுடன் ஆத்திரப்பட்ட அவர், டேய் அந்தப் படித்தெருவா? வெளியே போடா; என்ன தைரியம் இருந்தா வீட்டுக்குள்ள வருவ என்று கன்னத்தில் ஓங்கி அறைந்து எங்களை வெளியே தள்ளிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்.

விஷயம் கேள்விப்பட்டு எங்க பகுதி மக்கள் சுமார் 200 பேர் திரண்டு வந்து டாக்டரின் வீட்டின் முன்பு கூடிவிட்டனர். அப்போதும் கதவைத் திறக்கவில்லை. கொஞ்சநேரத்தில் பங்களாபுதூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர்கள் வேலுக்குட்டி, வெங்கடேஷ் ஆகியோர் வந்தனர். எதையும் விசாரிக்காமல் பொது இடத்தில் அமைதியைக் கெடுத்தாகச் சொல்லி இழிவாகப்பேசி அடித்து போலீஸ் ஜீப்பில் ஏற்றினார்கள். இதனால் ஆத்திரப்பட்ட மக்கள் சாலைமறியல் செய்தனர். உடனே சத்தியமங்களம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் தாசில்தார் சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதால் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

அதன் பிறகு பங்களா புதூர் காவல் நிலையத்திற்கு அழைத்தனர். நான் மருத்துவர், காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்தேன். அதன் பிறகு அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் அடுத்த 2 நாட்களில் என் மீது காவல்துறையினர் பணிசெய்ய விடாமல் தடுத்ததாக வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர். அதன் பிறகு ஜாமினில் வெளியே வந்தேன் என்று கூறி முடித்தார்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இருந்தபோதிலும் சாதிய அடக்குமுறைகள் தொடர்வதும்



தமிழ்த்திலகன் பெற்றோர் ஞானசேகரன், லதா

போலீஸ் அதற்குத் துணை போவதும் தொடர்கிறது. சிகிச்சை செய்ய மறுத்த டாக்டர் மீதும் காவல்துறை அதிகாரிகள் மீதும், துறைசார்ந்த நடவடிக்கை எடுக்கவும் ஞானசேகர் மீது போடப்பட்ட பொய் வழக்கை ரத்து செய்யவும் சிறுவனுக்கு உரிய மருத்துவச் சிகிச்சை கிடைக்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

**மணிகண்டன்**